JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw- 5 Witness
for Prosecution

| CC.No. | 284/2025 | Crime No. | | Station | |
|---|---|---|---|---|---|

| Name | **PW.5 சிவகுமார்** | Village |
|---|---|---|
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 17.03.2026 | | |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் பொதியாமுப்பனூரில் குடியிருந்து கொண்டு, பெயிண்டிங் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எனது உறவினர்கள் அ.சா.1 கந்தசாமி மற்றும் அ.சா.2 சுதா ஆகியோர்களை எனக்கு தெரியும். அவர்களும் எனது உறவினர்கள் ஆவார்கள். கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு ஒரு நாள் அ.சா.1 தரப்பினர்களுக்கும், எதிரிகளுக்கும் சண்டை நடைபெற்றதாக கேள்விப்பட்டேன். என்ன சண்டை என்று எனக்குத் தெரியாது. நான் அந்த சண்டையை நேரில் பார்க்கவில்லை. வழக்கு தொடர்பாக போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதியுடன்**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

கடந்த 02.02.2021ஆம் தேதியன்று மாலையில் நானும், பழனிசாமி என்பவரும் கந்தசாமி என்பவர் வீட்டின் வழியாக சென்று கொண்டிருந்ததாகவும், அப்போது கந்தசாமியின் மனைவி சுதா என்பவர் ஆடு மேய்த்துக் கொண்டிருந்ததாகவும், அங்கு வந்த எதிரிகள் சுதாவை தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும், பின்னர் மாலை 6.00 மணிக்கு கந்தசாமி வந்தவுடன் சுதா மேற்படி விபரங்களை கூறியதாகவும், அப்போது செல்வியும், பழனிச்சாமியும் கந்தசாமியை தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும், கந்தசாமியை எதிரிகள் இருவரும் இரு கைகளால் கன்னத்தில் அடித்து விட்டதாகவும், பின்னர் வேப்பங்குச்சியை எடுத்து கந்தசாமியை எதிரிகள் அடித்ததாகவும், மேற்படி சம்பவங்களை நான் நேரில் பார்த்ததாகவும், போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.17 18:59:03 +0530

எதிரிகள் உறவினர்கள் என்பதால் எதிரிகளுக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறுவிசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.17 18:59:09 +0530

Sd/- (J.RAJKUMAR)

**Judicial Magistrate No.1, Bhavani**